# ரமலான் சந்தையில் கைகலப்பு விசாரணை நடத்த வேண்டும்

கோலாலம்பூர், மார்ச் 30- ரமலான் சந்தையில் நிகழ்ந்த கைகலப்பு சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வாரின் அரசியல் செயலாளர் முகமட் காமில் கேட்டுக் கொண்டார்.

புனித நோன்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் இரவு சந்தையில் நிகழ்ந்த இந்த சம்பவம் அதிர்ச்சியையும் துயரத்தையும் தருகிறது என்று அவர் கூறினார்.

நேற்று முன்தினம் இரவு பரபரப்பு மிகுந்த ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான் சாலையின் இரவு சந்தையின் போது இந்த கைகலப்பு நிகழ்ந்ததாக கூறப்படுகிறது.



முறையான உரிமங்கள் இல்லாமல் பலர் இந்த சந்தையில் வர்த்தகம் புரிந்து வருவதாக புகார்கள் வெளியாகின.

அதனை அடுத்து கோலாலம்பூர் மாநகராட்சி மன்ற அமலாக்க பிரிவு அதிகாரிகள் காலை முதல் இரவு வரை அந்த சந்தையில் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டனர்.இரவு நேரத்தில் அங்கு நடத்தப்பட்ட சோதனையின் போது சட்டவிரோதமாக வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் பொருட்களை அவர்கள் பறிமுதல் செய்தனர்.

அப்போது அதிகாரிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் இடையே மூண்ட மோதல் கைகலப்பாக மாறியது. இது தொடர்பான காணொளி சமூக ஊடகங்களில் வெளியானது.

இச்சம்பவம் குறித்து கருத்துரைத்தபோது அமலாக்க பிரிவு அதிகாரிகள் முரட்டுதனமாக நடந்து கொண்டதாக கூறப்படுவது அதிர்ச்சியை தருகிறது என்று முகமட் காமில் தெரிவித்தார்.

இது நோன்பு மாதம். வருமானத்திற்காக சிலர் வர்த்தகம் புரிகின்றனர். அவர்களிடம் மனிதாபிமான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.